பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 12 2024 MONDAY 7.15 PM

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

- அமெரிக்கா முன்னாள் அதிபர் Jimmy Carter மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.
- உலகின் வலிமையான பொருளாதார மற்றும் ராணுவ நாடாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.
- முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்-கிற்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி தெலங்கானா சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- எத்தியோப்பியாவில் நேரிட்ட சாலை விபத்தில் 71 பேர் உயிரிழந்தனர்.
- ஹாங்காங் ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் Albano Olivetti இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*----- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>>

அமெரிக்கா முன்னாள் அதிபர் Jimmy Carter மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தொலைநோக்கு பார்வை கொண்ட தலைவர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

உலகளாவிய அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்காக ஓய்வின்றி பணியாற்றியவர் Jimmy Carter என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா – அமெரிக்கா இடையேயான உறவை வலுப்படுத்துவதற்காக அவர் அளித்த பங்களிப்பு இன்றியமையாதது என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

உலகின் வலிமையான பொருளாதார மற்றும் ராணுவ நாடாக இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேசத்தின் Mhow–வில் உள்ள ராணுவ போர் கல்லூரியில் இன்று அதிகாரிகளிடையே அவர் உரையாற்றினார்.

எதிர்காலத்தில் எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்கு ஏதுவாக, பாதுகாப்புப்படை வீரர்களை உருவாக்குவதில் ராணுவ பயிற்சி மையங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

தொழில்நுட்ப பயன்பாடுகளை அறிந்துகொள்வது காலத்தின் கட்டாயம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராணுவ பயிற்சி கல்லூரிகளில் இதற்கெற்ப வகையில் பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி 21 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதனை அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 50 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<>>>>>>

நீர்மூழ்கி போர் கப்பல்களில் பயன்படுத்துவதற்கான அதிநவீன கருவிகளை கொள்முதல் செய்வதற்கான இரண்டு ஒப்பந்தங்களில் பாதுகாப்புத்துறை கையெழுத்திட்டுள்ளது.

இதன்படி, மும்பையை சேர்ந்த நிறுவனத்துடன் ஆயிரத்து தொள்ளாயிரத்து 90 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தமும், பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஒரு நிறுவனத்துடன் 877 கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தமும் கையெத்திடப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ்குமார் சிங் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் எஃகு உற்பத்தி செய்வதற்காக 15 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான இயக்கத்தை செயல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது

எஃகு உற்பத்தியின்போது கரியமில வாயு வெளியேற்றத்தை குறைப்பதற்கு இந்த இயக்கம் உதவிடும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த இயக்கத்திற்கான நெறிமுறைகள் வகுக்கப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எஃகு துறையின் வளர்ச்சியை உறுதி செய்வதற்கு ஏதுவாக, உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருவதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதன் காரணமாக, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகை தொடர்ந்து அதிகரித்து வருவதாக சுற்றுலாத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டில் மட்டும் ஒரு கோடியே 88 லட்சத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இந்தியாவிற்கு வருகை புரிந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம், கிடைத்த வருவாயும் அதிகரித்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்களும் அதில் பட்டியலிடப்பட்டுள்ளன.

<<<<<>>>>>>

இந்திய வேளாண் ஆராய்ச்சிக்குழுமத்தின் சில நியமனங்களில் முறைகேடுகள் நடைபெற்றதாக வெளியான செய்திகள் தவறானவை என்று அந்த குழுமம் கூறியுள்ளது.

இதுதொடர்பான செய்திகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றவை என்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக்குழுமத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உரிய நெறிமுறைகளை பின்பற்றியே அனைத்து நியமனங்களும் மேற்கொள்ளப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

புதுதில்லி எயிம்ஸ் மருத்துவமனையில் 200 படுக்கைகளை கொண்ட அதிதீவிரசிகிச்சை பிரிவு ஏற்படுத்தப்பட உள்ளதாக அதன் இயக்குனர் திரு சீனிவாஸ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக இந்த பிரிவு தொடங்கப்பட உள்ளதாக தெரிவித்தார்.

அடுத்த இரண்டாண்டுகளுக்குள் இந்த பிரிவு செயல்பட தொடங்கும் என்றும் அவர் கூறினார்.

இதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எயிம்ஸ் மருத்துவமனை சார்பில் தொலைபேசி வழி மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

எயிம்ஸ் மருத்துவமனைகளை வருடத்திற்கு 50 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்படுத்துவதாகவும் திரு சீனிவாஸ் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

மத்தியப்பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் அமலாக்கத்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

சட்ட விரோத பணப்பரிமாற்ற தடுப்பு சட்டத்தின்கீழ் போபால், குவாலியர் மற்றும் ஜபல்பூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் இந்த சோதனை நடைபெற்றதாக அமலாக்கத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த சோதனையின்போது ஆறு கோடி ரூபாய் முதலீட்டிற்கான பத்திரங்களும், பல்வேறு ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவ்ரவ் சர்மா தொடர்புடைய வழக்கில், இந்த சோதனை நடைபெற்றுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங்-கிற்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி தெலங்கானா சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்மோகன்சிங் மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக அழைப்பு விடுக்கப்பட்டிருந்த சிறப்புக்கூட்டத்தில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஹைதராபாதில் மன்மோகன் சிங்-கின் சிலையை நிறுவுவதற்கு வகை செய்யும் மற்றொரு தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தெலங்கானா மாநிலத்தை உருவாக்குவதற்காக அவர் அளித்த பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

முன்னதாக, இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி, தொலைநோக்கு பார்வை கொண்ட சிறந்த பொருளாதார நிபுணர் மன்மோகன்சிங் என்று புகழாரம் சூட்டினார்.

நாட்டின் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு வித்திட்டவர் மன்மோகன்சிங் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

ரிசர்வ் வங்கியின் கவர்னராக, மத்திய நிதியமைச்சராக, பிரதமராக மன்மோகன்சிங் ஆற்றிய பணி மகத்தானது என்றும் திரு ரேவந்த் ரெட்டி கூறினார்.

<<<<<>>>>>>

தில்லி வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்த 61 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களை ஆம் ஆத்மி அரசு நீக்கியுள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிம் பேசிய அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு Parvesh Sahib Singh Verma, முன்னாள் முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலின் தொகுதியில் இந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குறை கூறினார்.

<<<<<>>>>>>

இளையோரிடையே அறிவியல் ஆர்வத்தை ஊக்குவிப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இதன் ஒருபகுதியாக, இளம் விஞ்ஞானிகளுக்கான ஐந்து நாள் பயிற்சி முகாம் தமிழகத்தின் சேலம் மாவட்டம் ஏற்காட்டில் நடைபெற்றது.

140 மாணவர்கள் இதில் பங்கேற்று பயனடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 43 செகண்ட்ஸ்)*

பிரச்சினைகளுக்கு தொழில்நுட்ப ரீதியாக எவ்வாறு தீர்வுகாண்பது என்பது குறித்து இப்பயிற்சி முகாமில் எடுத்துரைக்கப்பட்டதாக இதில் பங்கேற்ற மாணவர்கள் தெரிவித்தனர்.

*(சவுண்ட பைட் - மாணவர்கள் - 29 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

எத்தியோப்பியாவில் நேரிட்ட சாலை விபத்தில் 3 பெண்கள் உட்பட 71 பேர் உயிரிழந்தனர்.

Sidama மாகாணத்துக்கு உட்பட்ட பகுதியில் சென்றுகொண்டிருந்த லாரி ஆற்றுக்குள் கவிழ்ந்து விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

திருமண நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து நேரிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

நேபாளத்தில் கடந்த ஐந்து நாட்களாக நடைபெற்ற தேன் திருவிழா இன்று நிறைவடைந்தது.

இந்த திருவிழாவில் ஆறு வகையான தேன் பார்வையாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட தேன் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த திருவிழா நடத்தப்படுகிறது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஹாங்காங் ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் யுகி பாம்ரி – பிரான்சின் Albano Olivetti இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-3, 5-7, 10-5 என்ற செட் கணக்கில், ஜெர்மனியின் Constantin Frantzen – Hendrik Jebens இணையை வென்றது.

-----------------

மாலத்தீவுக்கு எதிரான நட்புணர்வு மகளிர் கால்பந்து போட்டியில் இந்தியா 14-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில், Pyari மற்றும் Lynda ஹாட்ரிக் கோல் அடித்தனர்.

-------------

மெல்பர்னில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா 184 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

------------

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான சிறந்த ஆட்டக்காரர் விருதுக்கு நடப்பாண்டில் இந்தியாவின் பும்ரா, இலங்கையின் Kammindu Mendis, இங்கிலாந்தின் Joe Root மற்றும் Harry Brook பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

<<<<<END>>>>>>